DEPOSITION OF WITNESS
IN THE COURT OF ADDITIONAL DISTRICT AND SESSIONS,
(FAST TRACK COURT), KUMBAKONAM

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | | | : | **S.C :213/2017** | |
| Prosecution Witness | | | : | **PW - 8** | |
| Name | : | **திரு. திருமால்** | Occupation | : | நேர்முக உதவியாளர், (பொது) புதுக்கோட்டை |
| Father's Name/ Husband | : | **சுந்தரமூர்த்தி** | | | |
| Village | : | | Age | : | 57 |
| Taluk | : | **புதுக்கோட்டை** | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 06th day of October 2025. 06-10-2025

**(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் . எதிரிகள் 1, 2 ஆஜரில்லை. 1, 2 எதிரிகள் சார்பில் BNSS பிரிவு 355 இன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு , அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் தற்போது புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேர்முக உதவியாளர் (பொது) ஆக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு நான் பாபநாசம் வட்டாட்சியராக பணியில் இருந்த போது , 18/01/2017 அன்று மாலை 03.30 மணியளவில் வீராஞ்சேரி கிராமத்தை சேர்ந்த சரவணன் த/பெ.குருநாதன் வயது 33 என்பவர் என்னிடம் நேரில் ஆஜராகி கீழ்கண்டவாறு ஒரு வாக்குமூலம் கொடுத்தார். அவர் கொடுத்த வாக்குமூலத்தை நான் டைப் அடிக்கச்சொல்லி டைப் செய்தேன். அதில் அவர் சொன்னவற்றை பதிவு செய்து , அதை அவரிடம் படித்து காண்பித்தேன். அதில் சரவணன் கையெழுத்து செய்தார் . நானும் கையெழுத்து செய்தேன். அவ்வாறு சரவணன் என்னிடம் கொடுத்த வாக்குமூலம் **அ.சா.ஆ. 8 ஆகும்.** (இந்த வாக்குமூலம் இன்று தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதால் , எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டு, ஆட்சேபனைக்குட்பட்டு குறியீடு செய்யப்பட்டது . இதன் ஒரு நகல் இன்று எதிரி தரப்பு வழக்கறிஞருக்கு கொடுக்கப்பட்டது.) பின்னர் கபிஸ்தலம் காவல் நிலைய ஆய்வாளருக்கு தகவல் கொடுத்து , அவரை என் அலுவலகத்திற்கு வரச்சொன்னேன் . கபிஸ்தலம் காவல் ஆய்வாளரிடம் எதிரி சரவணனையும் , சரவணன் கொடுத்த அசல்

வாக்குமூலத்தையும் உரிய மேல் நடவடிக்கைகாக ஒப்படைத்தேன் . சரவணனை நேரில் பார்த்தால் , என்னால் அடையாளம் காட்ட முடியும் . (எதிரி இன்று ஆஜரில்லை) ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**முதல் எதிரி தரப்பு குறுக்கு விசார**ணை.

இந்த ஆவணங்கள் குறித்து பதிவேடு எதுவுமில்லை. முதல் எதிரி ஆஜரானதாக சொல்லப்படும் தேதியில் என் அலுவலகத்தில் , எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் 1, 2 பேர் தான் இருந்தனர் . 18/01/2017 அன்று அரசு விடுமுறை என்றால் ஆமாம் . அரசு விடுமுறை அன்று நாங்கள் அலுவலகம் செல்லமாட்டோம் என்றால் சரியல்ல . எங்களுக்கு 24 மணி நேர பணி. கபிஸ்தலம் காவல் நிலையம் ஆய்வாளருக்கு நான் தகவல் சொன்ன போது சுமார் 4 மணி இருக்கும். ஆய்வாளர் 4.15 மணிக்கு வந்துவிட்டார் . சரவணன் கொடுத்த வாக்குமூலத்தை என் அலுவலக ஊழியர் தான் டைப் செய்தார். தற்போது அவர் பெயர் எனக்கு ஞாபகமில்லை. டைப் செய்தது ஆண் ஊழியர் தான். டைப் செய்தவர்க்கு அன்று வேலை நாளா என்றால் Turn Duty. அவரை போலிசார் விசாரிக்கவில்லை. என் அலுவலகத்தில் பணியாளர் வருகை பதிவேடு உள்ளது என்றால் சரி. வருகை பதிவேட்டை பார்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்றால் சரிதான். சரவணன் நான் சொன்ன நாள் நேரத்தில் என் அலுவலகத்திற்கு வரவில்லை என்றாலும் என்னிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல . என்னிடம் கொடுத்ததாக சொல்லப்படும் வாக்குமூலம் போலிசாரால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2 ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.